**பதவி வெற்றிடம்**

**முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**வக்ப் சபை - இலங்கை**

**சட்ட உத்தியோகத்தர் (ஒப்பந்த அடிப்படையில்) முழு நேரம்.**

சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகுதிகளையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***1. தகைமைகள்***

(அ) கல்வித் தகைமைகள்

இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) தொழில் அனுபவம்

இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து பின்னர் ஒரு ஆண்டுக்கு குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள்

- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றவராகவும் கணனித்துறையில் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- வக்ப் சம்பந்தமான அறிவும், தெளிவும் இருப்பது மேலதிகமான தகைமையாகக் கருதப்படும்.

***2. வயதெல்லை***

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி 21 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

***3. சம்பளம்.***

பொதுநிர்வாக சுற்றறிக்கை 10/2025 SL-1 இற்கமைய அடிப்படை சம்பளம் 82,150.00 (2027) ரூபாவுடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் EPF / ETF வழங்கப்படும்

4. ***நியமனத்தின் தன்மை***: ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் திணைக்களத்தின் தேவை, செயற்திறன் என்பன கருத்திற் கொண்டு சேவைக் காலம் நீடிக்கப்பட முடியும்.

5. ***பொதுவான தகைமைகள்***

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்குரிய தேகாரோக்கியம் மற்றும் புத்திசுயாதீனம் உடையவராக இருக்க வேண்டும்.
- நற்பண்புகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

***6. ஆட்சேர்ப்பு முறைமை***

இப்பதவிக்கான ஆட்சேர்ப்பானது நேர்முகத்தேர்வின் முடிவுகஅடிப்படையில் மேற்கொள்ளப்படும்

7. ***விண்ணப்பிக்கும் முறை:***

www.muslimaffairs.gov.lk என்ற திணைக்கள இணையதளத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று முறையாக பூர்த்தி செய்து முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல. 180, ரீ.பீ.ஜாயா மாவத்தை கொழும்பு 10. எனும் முகவரிக்கு 2026.10.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு** : விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்**" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர்
முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
இல. 180, ரீ.பீ.ஜாயா மாவத்தை கொழும்பு 10.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED